9th February 1959]

(d) Average annual requirements about 110
Estimated deficit per year 30

(e) Total admissions to the B.V.Sc. Course were increased from 80—100 during the academic year 1955–56 and again from 100 to 120 from 1956–57 onwards. The Government of India have also been addressed to dereserve the 23 seats allotted to Andhra Pradesh as they have since got increased facilities in their State itself and their final reply is awaited.

SRI A. VEDARATHNAM : நம்முடைய மாநிலத்தில் கால்நடை மருத்துவர்களுடைய பற்றுக்குறை மிகமிக அதிகமாக இருப்பதனால் பல ஆஸ்பத்திரிகளைத் திறந்தும் அங்கே இன்னும் டாக்டர்களை நியமிக்க முடியாமல் இருக்கிறது. ஆகவே அதிகமான பேர்களுக்கு கால்நடை வைத்தியப் பயிற்சியை அளிக்க அக் காலேஜில் ஷிப்டு முறையை அனுசரிக்க இந்த அரசாங்கத்தார் முன் வருவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்தப்பற்றுக் குறையை நீக்க வேண்டுமென்று தான் வெடர்னரி காலேஜில் சேர்ந்து படிக்கக் கூடிய மாணவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தியிருக்கிறோம். ஷிப்டு முறையை ஏற்படுத்துவது என்பது முடியாத காரியம். அதற்கு லாபரடிரி வசதி வேண்டும்.

SRI V. SUBBIAH : போஸ்ட் க்ராஜ்வேட் மாணவர்களுக்கு நம் ராஜ்யத்தில் எவ்வளவு ஸ்டைபண்டு கொடுக்கப்படுகிறது ?

MR. SPEAKER : அடுத்த கேள்வி போஸ்ட் க்ராஜ்வேட்டைப் பற்றியது. இந்த உபகேள்வியை அதில் போடுங்கள்.

SRI M. R. KANDASWAMY MUDALIYAR : போதுமான கால் நடை வைத்தியர்கள் இல்லாத காரணத்தினால் அங்கே உள்ள ஆடு மாடு கள் நஷ்டம் அடைகின்றன. ஆகையால் ஷிப்டு முறையை வெடர்னரி காலேஜில் அனுசரிப்பதானது கொஞ்சம் அனுகூலமாக இருக்கும் என்ற காரணத்தினால் அமைச்சர் அவர்கள் அதை ஏற்படுத்த முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : முன்பே கனம் வேத ரத்தினம் அவர்களுடைய கேள்விக்கு நான் பதில் சொல்லியிருக்கிறேன். அதாவது ஷிப்டு முறையை ஏற்படுத்துவது அசௌகரியமானது, சாத்திய மில்லை என்று சொன்னேன்.

SRI V. R. RAMASWAMY MUDALIYAR : I understand that both in the Kerala and Mysore States, they have started Colleges. If it is a fact, will the Hon. Minister kindly address the Government of India and see that no seats are allotted to those States?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Afer all, we allot very few seats for those States. I shall, however, look into the question.

Veterinary Colleges

* 132 Q.—SRI A. VEDARATHNAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) கால்நடை கல்லூரியில் உயர்தரக் கல்லூரி வகுப்பு (Post-Graduate) எப்போது ஆரம்பிக்கப்பட்டது ?

(ஆ) இந்த வகுப்பில் எந்தெந்த மாநிலத்தவர் எத்தனை பேர் படிக்கிறார்கள் ?

(இ) கால்நடை மருத்துவக் கல்லூரியை விஸ்தரிக்கும் உத்தேசம் அரசாங்கத்திற்குண்டா ? அப்படியாயின் அதன் விபரமென்ன ?

[9th February 1959

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) On 1st September 1958.

(b) Eighteen students belonging to different States as stated below are undergoing the course :—

		Students.
Madras	... ...	9
Andhra Pradesh	... ...	5
Mysore	... ...	1
Kerala	... ...	1
Bihar	... ...	1
Orissa	... ...	1

(c) Yes.

Three more groups in the M.V.Sc. Degree course with nine students for each group are proposed to be introduced from 1959–60 onwards as follows :—

Group III—
Physiology,
Pharmacology, and
Therapeutics.

Group IV—
Anatomy,
Surgery, and
Gynaecology.

Group V—
Medicine,
Hygiene, and
Meat Inspection.

SRI A. VEDARATHNAM : இந்த மாநிலத்திலேயே கால்நடை மருத்துவர்கள் பற்றாக்குறையாக இருக்கும்போது வெளி மாகாணத்து மாணவர்களை இங்கே சேர்க்க வேண்டிய அவசியம் என்ன ? அந்த அந்த மாநிலங்களிலேயே அவர்களுக்குப் பயிற்சி கொடுக்கும்படியாகச் செய்ய முடியாதா ? அல்லது வேறு மாநிலங்களிலே உள்ள கால்நடைக் கல்லூரிகளில் படிக்க வசதி செய்யக்கூடாதா ? அதுவும் நம்முடைய பற்றாக் குறை நீங்கும் வரைக்கும் என்று கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இது போஸ்ட்-கிராஜ்வேட் பற்றியது. ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள கல்லூரியில் அமைக்க முடியாது. ஆகவே மத்திய அரசாங்கத்தின் அனுமதியைப் பெற்று இங்கே ரீஜனல் போஸ்ட்-கிராஜ்வேட் கோர்ஸ் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே இதர மாகாணத்தவர்களையும் சேர்த்துக்கொள்ளத்தான் வேண்டும்.

SRI V. SUBBIAH : போஸ்ட்-கிராஜ்வேட் மாணவர்களுக்கு ஸ்டைபண்டு கொடுக்கப்படுகிறதா ? கொடுக்கப்படவில்லையென்றால் கொடுக்கும் உத்தேசம் உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஸ்டைபெண்டு ஓரளவு கொடுக்கப்பட்டு வருகிறது. அதைப்பற்றிய தகவல் என்னிடம் இல்லை.